

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 10.04.2025 | விழுப்புரம் மத்தியம் | வானூர் | சித்தலம்பட்டு ஊராட்சி அலுவலகம், கண்டமங்கலம் | கோவி. லெனின், வீ. வேல்முருகன் |
| 2 | 11.04.2025 | கடலூர் கிழக்கு | கடலூர் | கடலூர் | **திருச்சி சிவா** எம்.பி., கு.அஷ்வின் |
| 3 | 12.04.2025 | நாமக்கல் மேற்கு | திருச்செங்கோடு | தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு | பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்,** க.நந்தகுமார் |
| 4 | 12.04.2025 | கரூர் | குளித்தலை | தோகை மலை | செந்தில்வேல், வே.குணஸ்ரீ |
| 5 | 12.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | கள்ளக்குறிச்சி | வானவரெட்டி ஊராட்சி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, ஆ.ஷர்மிளா |
| 6 | 13.04.2025 | ஈரோடு வடக்கு | பவானிசாகர் | அரியப்பம்பாளையம் | எழுத்தாளர் வே.மதிமாறன், மு.கௌரி மனோகரி |
| 7 | 15.04.2025 | கள்ளக்குறிச்சி தெற்கு | ரிஷிவந்தியம் | மேல் சிறுவளூர் கூட்டுரோடு | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ச.ஐஸ்வர்யா |
| 8 | 19.04.2025 | புதுக்கோட்டை வடக்கு | கந்தர்வக்கோட்டை | பேருந்து நிலையம் அருகில், கந்தர்வக்கோட்டை | தமிழ் கா.அமுதரசன், இ.நேரு |
| 9 | 19.04.2025 | கடலூர் கிழக்கு | புவனகிரி | கம்மாபுரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், ர.கோமதி |
| 10 | 20.04.2025 | கடலூர் கிழக்கு | குறிஞ்சிப்பாடி | குள்ளஞ்சாவடி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, நா.சத்தியப்பிரியன் |
| 11 | 26.04.2025 | கடலூர் கிழக்கு | சிதம்பரம் | பரங்கிப்பேட்டை | **நாஞ்சில் சம்பத்,** க.செல்வமணி |
| 12 | 27.04.2025 | கடலூர் கிழக்கு | காட்டுமன்னார்கோயில் | திருமுட்டம் | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, க.தமிழ்மணி |

**அன்பகம்,** சென்னை – 18.
நாள் : 07–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு 5.4.2025 அன்று திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் கும்பகோணம் கோட்டம் திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் 10 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், விஜய ஜெயராஜ், தொ.மு.ச. குணசேகர், மோகன்தாஸ், கலைச்செல்வி, வே.சரவணன், ஆ.முத்துகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



நெய்வேலி சட்டமன்ற தொகுதி BLA2&BLC ஆலோசனைக் கூட்டம் மற்றும் கடலூர் மேற்கு மாவட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. தலைமையில் நெய்வேலி தொகுதி பார்வையாளர் தெய்வ. இளையராஜா முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ராஜா, ஜெகநாதன், ஆடலரசன், செல்வகுமார், எம்.பி.சுரேஷ், ராஜேஷ், வழக்கறிஞர் அரிதாஸ், ஞானசேகர், நடராஜன், ராஜ்குமார், பைரவன், கண்ணப்பன், மணிகண்டன், மணிவாசகம், ஆனந்தன், குமார், தர்மலிங்கம், பாலகிருஷ்ணன், ராமதாஸ், BLA 2&BLC பாக நிலை முகவர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திரு.வி.க. நகர் தெற்குப் பகுதியில் தண்ணீர் பந்தல்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, ஏப்.9- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி தண்ணீர் பந்தலை 4.4.2025 அன்று எஸ்.எஸ்.புரம் பி பிளாக் மெயின் தெரு பிரிக்ளின் சாலையில் திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர்.மனோஜ்சேகரன் தலைமையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்துகொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் வானவில் விஜய் முன்னிலை வகித்தார். பி.ஸ்ரீதர் ராஜன், கே.நாராயணன், ச.செல்வ குமார், வா.பிரதாப், ஒய். வசிம், ஐ.கே.ரவிராஜ் ஆகியோர் வரவேற்றுப் பேசினார்.

இதில் எம்.சாமிக் கண்ணு, இசட் ஆசாத், விவசாய அணி அமைப்பாளர் இரா.வீரமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


